மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி. சி. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் ஐப்பசித்திங்கள் 06 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 188/2021-ல்**

**அசல் வழக்கு எண். 07/2018**

ஜெயபால் ...மனுதாரர் /வாதி

// **எதிர்**//

ஞானசம்பந்தம் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 08.10.2021ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன் , மற்றும் திரு. A. ஞானசேகரன் ஆகியோர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. R. சம்பத்குமார், செல்வி. S. வைஷ்ணவி ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14(3)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது வாதியால், பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு 29.07.2021ம் தேதியன்று வாதி தரப்பு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பு கட்சியினை நிரூபணம் செய்வதற்கு

ஆதரவான பட்டா, சிட்டா, அடங்கல், வில்லங்க சான்று, மேலெழுத்து ஆகிய ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளது. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்து கொள்வதற்கும், வழக்கை நிரூபிப்பதற்கும் மிக முக்கியமான ஆவணங்கள் ஆகும். எனவே, அசல் வழக்கில் ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களை ஏற்க உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட</u>

<u>ஆட்சேபணையின் சுருக்கம் :-</u>

மனு, அபிடவிட்டில் கண்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். இவ்வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்று சொல்லப்படும் பட்டா, சிட்டா, அடங்கல், வில்லங்கச்சான்று ஆகியவைகள் உண்மையல்ல. அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர்/வாதியால் மோசடியாக தயார் செய்யப்பட்டவையாகும். தற்போது மனுவின் தோதுவிற்காக மனுதாரரால் பொய்யான காரணங்களை கூறியும், நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கு 29.07.2021ம் தேதியன்று வாதி தரப்பு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் வாதி தரப்பு கட்சியினை நிரூபணம் செய்வதற்கு ஆதரவான பட்டா, சிட்டா, அடங்கல், வில்லங்க சான்று, மேலெழுத்து ஆகிய ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளது என்றும், ஆவணங்களை குறியீடு செய்து கொள்வதற்கும், வழக்கை நிரூபிப்பதற்கும் மிக முக்கியமான ஆவணங்கள் என்றும்

எனவே, ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களை ஏற்க உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.** எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்று சொல்லப்படும் பட்டா, சிட்டா, அடங்கல், வில்லங்கச்சான்று ஆகியவை உண்மையானது அல்ல என்றும், அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர்/வாதியால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், தற்போது மனுவின் தோதுவிற்காக மனுதாரரால் பொய்யான காரணங்களை கூறியும், நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**
**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>பிரச்சினை</u>:-**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**2.** அசல் வழக்கானது வாதியின் அனுபவத்தில் இருந்து வரும் தாவா சொத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, அவர் மூலம் உரிமை கோரும் வேறு நபர்களோ எந்த விதத்திலும் தடை செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வா.சா.1-ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக போடப்பட்டிருந்தபோது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு

செய்யப்படவில்லை.

**4.** இரு தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலிக்கையில், அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு வாதி தரப்பு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில், கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து வாதி தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மனுதாரர்/வாதி தரப்பில் வாதிடப்பட்டதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. இது குறித்து, எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதிலும், இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நம்பகத்தன்மை, செல்லும் தன்மை, தொடர்பு சம்மந்தமாக குறுக்கு விசாரணை செய்வதற்கு எதிர்மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு இருப்பதை கருத்திற்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்திற்கொண்டும் நீதியின் பால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (23.10.2021) அவையறியப் பகரப்பட்டது.

( S/d. C. Kalaivani.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>** :-

**இருதரப்பிலும்** : இல்லை

( S/d. C. Kalaivani.,)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.